C.C 154/21
PW 1

பெயர் சரண்குமார்

தேதி 18.10.2022

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பிஇ படித்துள்ளேன். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே 3 கி,மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கும் க.விலக்கு மருத்துவமனைக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தேன். எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தேன் என்றால் 9.30 மணிக்கு தகவல் கொடுத்தேன். புகாரை நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் போலிசார் தான் எழுதினார்கள். வாக்குமூலம் தான் கொடுத்தேன். நான் மருத்துவமனை செல்லும் போது 10 மணி இருக்கும். போலிசார் 9.40 மணிக்கு வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். பொதுவாக நான் எத்தனை மணிக்கு கடையை திறந்து மூடுவேன் என்றால் சாயந்திரம் 5 மணிக்கு திறந்து 11 மணிக்கு மூடுவேன். சம்பவத்தின் போது எண்ணெய் சட்டி கிழே கிடந்த அங்கேயே கிடந்தது எண்ணெய் கொட்டிவிட்டது என்றால் சரிதான். எதிரி அவர் மட்டும் வந்தாரா என்றால் அவரது மனைவியும் வந்தார். எந்த தேதியில் அட்வான்ஸ் பணம் கொடுத்தேன் என்று புகாரில் கூறவில்லை. எதிரி எண்ணெய் சட்டியை தட்டிவிடவில்லை என்றாலும் அதில் எனக்கே எனது மனைவி குழந்தைக்கோ காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை கிழே தள்ளிவிட்டு அடிக்கவில்லை என்றாலும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் , அசிங்கமாக பேசவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும் அந்த சமயத்தில் தவறுதலாக என்னுடைய கை பட்டு எண்ணெய் சட்டி கிழே விழுந்துவிட்டது என்றும் அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என் கடையில் வேலை பார்க்க மறுத்ததால் அவரை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெற்ற பின்பு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.